# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.543/2024

Deposition of Witness for L.W.9 / P.W.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தாமரை செல்வன் | | | |
| Father's/ | : | முருகன் | Occupation | : | கட்டிடவேலை |
| Village | : | சித்தோடு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.07.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் சித்தோட்டில் வசித்துக் கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 10.01.2021 அன்று காலை சுமார் 07.30 மணி அளவில் அசோகபுரத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு நான் என்னுடைய இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கிருந்த பேருந்து நிறுத்தத்தில் 16 எண் கொண்ட பேருந்து நின்று கொண்டிருந்தது. அதன் பின்னால் நாகலாதன் என்ற பெயருடைய பேருந்து ஒன்று சுமார் 10 அடி தூரத்தில் ஈரோட்டில் இருந்து பவானி நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது பவானியில் இருந்து ஈரோடு நோக்கி இரு சக்கர வாகனத்தில் ஒரு 30 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அவரது பின்னால் 50 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி உட்காந்து வந்தார். மேற்படி பேருந்து முன்புற வலது பக்கத்தில் இருசக்கர வாகனத்தில் வலது புற ஆண்டில் பார் மோதியது. இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் அந்த இடத்திலேயே கீழே விழுந்து விட்டனர். அந்த ஆண் ரோட்டில் இடது புறமாகவும், அந்த பெண்மணி ரோட்டின் வலது புறமாகவும் விழுந்துவிட்டார். அந்தப் பெண் விழுந்தவுடன் அவர் தலைமீது அந்த பேருந்தில் டயர் ஏறியது, ஏரியாவுடன் தலை நசுங்கி மூளை வெளியே வந்து விட்டது. விபத்து நடந்த உடனே பேருந்து ஓட்டி வந்த ஓட்டுநர் இறங்கி ஓடிவிட்டார். நானும் எனது நண்பனும் மட்டும் தான் அங்கு சென்று இருந்தோம்.

கருங்கல்பாளையம் போலீசார் எங்களை விசாரித்தார்கள். வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

10.01.2021 ஆம் தேதி காலை 7.20 மணிக்கு நானும் எனது நண்பர் அருண் என்பவருடன் பவானி செல்வதற்கு ஈரோடு பவானி மெயின் ரோடு அசோகபுரம் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் அருணின் பைக்கிற்கு பெடரோல் அடிக்க நின்று கொண்டிருந்த போது பவானி to ஈரோடு பக்கம் செல்வதற்கு TN– 86 –C– 8479 ஸ்கூட்டி பெப் பைக்கில் பின்னர் பெயர் தெரிந்த லட்சுமி என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு வடக்கில் இருந்து தெற்கு திசையாக பின்னர் பெயர் தெரிந்த முனியாண்டி என்பவர் ஒட்டி வந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் வலது பக்கம் 16 ஆம் நெம்பர் தனியார் டவுண் பஸ் பவானி போவதற்காக அசோகபுரம் பஸ் நிறுத்ததில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு திசையாக NL–01B1522 எண்ணுள்ள தீபம் டிராவல்ஸ் தனியார் பேருந்தின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், ஓட்டி வந்தவர் முன்னால் நின்றிருந்த 16 நெம்பர் டவுன் பஸ்ஸை வலது புறமாக ஓவர்டேக் செய்து வந்த போது முனியாண்டி ஒட்டி வந்த பைக்கில் வலது பக்க ஹேண்டில் பாரில் மோதிவிட்டதாகவும், அதில் முனியாண்டி பெட்ரோல் பங்க் பக்கம் வண்டியுடன் விழுந்துவிட்டதாகவும், லட்சுமி என்பவர் வலது பக்கம் ரோட்டில் விழுந்த போது பஸ்ஸின் வலது பக்க பின்டயர் லட்சுமியின் தலையில் ஏறி இறங்கியதாகவும், அதை பார்த்த தான் மற்றும் அங்கிருந்தவர்கள் ஓடிப்போய் பாரத் பாரத்த போது லட்சுமி தலை நசுங்கி மூளை வெளிவந்து அதே இடத்தில் இறந்துவிட்டதாகவும், முனியாண்டியை பார்க்க அவரது வலது முழங்கால், வலது கை உள்ளங்கை, இடது கை கட்டை விரலில் ரத்தகாயம் ஏற்பட்டிருந்ததாகவும், அப்போது காயம்பட்டவர் தனது பெயர் முனியாண்டி என்றும், இறந்து போய்கிடப்பவர் பெயர் லட்சுமி என்றும் சொல்ல தெரிந்து கொண்டதாகவும், அப்போது விபத்து ஏற்படுத்திய தனியார் பஸ்ஸின் ஓட்டுனர் பற்றி விசாரித்த போது சேலம் மாவட்டம், ஆத்தூர், கல்லா நத்தம் பகுதியை சேர்ந்த ரங்கசாமி மகன் பாலு என சொன்னதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை அடையாயம் தெரியாது என்று

எதிரிக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.